interunido
thunstettenstrasse 40
4900 langenthal
tel 062 922 38 30 sek@winterunido.ch

# அறிமுகம் **interunido**

interunido இலங்கந்தால் ஓபர்ஆர்கவ் பகுதியில், குடியேற்றம், ஒன்றுசேர்த்தல் போன்றவற்றிற்குத் தேவையான தொழில் மற்றும் கல்விக்கூடமாக தலைமை வகிக்கின்றது.
interunido சமயம் மற்றும் அரசியல் சார்பற்றது. இந்தச் சலுகைகள் வருமானத்திற்காக ஏற்படுத்தப்பட்டவை அல்ல. இதற்கு பொறுப்பேற்கும் சங்கம் (BIO) கல்வி மற்றம் ஒன்றுசேர்த்தல் இவற்றை முன்னேற்றும் நிலையமாக ஓபர்ஆர்கவ் இல் இயங்கி வருகின்றது.
தொழிற்பாடுகள் : கல்வி, பலதரப்பட்ட கலாச்சாரங்களுக்கிடையிலான ஊடகம், ஆலோசனை
interunido இனால் கிடைக்கும் சலுகைகள் அனைத்திற்கும் தேவையான பண உதவியினை வழங்குபவர்கள், பேர்ண் மாகாணத்தின் கல்வித்திணைக்களம், குடிவரவு திணைக்களம் (BFM), இலங்கந்தால் நகராட்சி, லாஜிஸ் சுவிஸ் (Logis Suisse) மற்றும் பல.

இந்தக் கல்விச்சேவைச் சலுகைகள் அனைத்தும் eduQua எனப்படும் தரக்கட்டுப்பாட்டு முத்திரைச் சான்றிதழ் பெற்றது.

## சலுகைகள்

### கல்வி

வேற்றுமொழி பேசுபவர்களுக்கும் தொழில் ரீதியினாலானவர்களுக்கும் பலதரப்பட்ட பாடங்கள் மற்றும் கருத்துப்பரிமாற்றங்கள்.
டொச்மொழியிற்கான விரிவாக்கப்பட்ட சலுகைகள்:

- தரங்களுக்கு ஏற்ப பல வகுப்புக்கள். பரீட்சை மூலம் தரத்திற்கு ஏற்றவாறு பிரிக்கப்படுவார்கள்.
- சிறிய குழுவாகப் பிரிக்கப்பட்டு தனிப்பட்ட முறையில் முன்னேற்றப்படுவார்கள்.
- அவர்கள் கல்வித்தேவையைப்பொறுத்தும் அவர்களுடைய கற்கும் வேகத்தைப்பொறுத்தும் வகுப்புக்கள் அமையும்.
- தாய் - சேய் டொச்மொழி (3 – 5 வயது குழந்தைகள், பாலர்பாடசாலைக்கு ஆயத்தப்படுத்தல்)
- அனுபவமிக்க தகுதியான ஆசிரியைகள்
- மிகக்குறைந்த கட்டணம்

### திட்டங்கள்

பலதரப்பட்ட வகுப்புச் சலுகைகள், உதாரணமாக

- குழந்தைகளின் ஆரம்பகால முன்னேற்றம்
- வீட்டுப்பாட உதவி
- கல்விசம்பந்தமான கேள்விகள்
- சந்திப்புக்களும் கருத்துப்பரிமாற்றங்களும்
- குடிமனைப்பகுதியில் வசித்தல்

### பலதரப்பட்ட கலாச்சாரங்களுக்கிடையிலான ஊடகம் மற்றும் மொழிபெயர்த்தல்

- கலாச்சாரஊடகவியலாளர்களின் மொழிபெயர்ப்பு மற்றும் ஊடகம் 13 மொழிகளில் (வாய்மொழி மட்டும்)
- அவசரத்தேவைக்கேற்ப தொலைபேசியினூடான மொழிபெயர்ப்பு
- பல கலாச்சாரத் திட்டங்கள்

### ஆலோசனை

ஆர்வமுள்ள நபர் மற்றும் குடியேற்றம் மற்றும் ஒன்றுசேர்த்தல் இவற்றிற்காக இயங்கும் நிலையங்கள் போன்றவற்றிற்கான அறிவித்தல்கள். கீழ்காணும் விடயங்களில்:

- பாடசாலை மற்றும் கல்வி
- மேற்படிப்புக்கள், மொழி மற்றும் ஒன்றுசேர்த்தல் வகுப்புக்கள்
- சமூக மற்றும் சுகாதார பராமரிப்பு
- பிரத்தியேக விஷேட தொழில் நிலையங்கள் மற்றும் நிபுணர்கள்
- வேலை
- சட்டம் சார்ந்த கேள்விகள்
- கலாச்சாரஊடகவியலாளர்களின் ஊடகம் மற்றும் மொழிபெயர்ப்பு
- திட்ட ஆலோசனைகள்

நீங்கள் எங்களுடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்த விரும்பினால் எங்களைத் தொலைபேசியில் அழையுங்கள் அல்லது மின் அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

interunido
thunstettenstrasse 40
4900 langenthal
tel 062 922 38 30 sek@winterunido.ch

இருப்பிடத்தின் வரைபடம்

அலுவலக மற்றும் டொச் (அதி கூடிய) வகுப்புகள் முகவரி
வழி: இலங்கந்தால் புகையிரத நிலையத்திலிருந்து:
`Dennli` திசை நோக்கிச் செல்லும் பேருந்து இலக்கம் 14 இல் தரிப்பிடம் `Bahnhof Süd` (கிட்டத்தட்ட 8 நிமிட பயணதூரம்). பின்னர் 5 நிமிடநேர நடை interunido வரை. உருளைக்கிழங்கு தொழிற்சாலை Kadi க்கு எதிரில், பெரிய குடியிருப்புக் கட்டடத்தில் (வெள்ளை மற்றும் இளம் நீல வர்ண கட்டடம்) அமைந்துள்ளது.

தாய் - சேய் டொச் வகுப்பு முகவரி
வழி:
கத்தோலிக்க தேவாலயத்தின் உயர்ந்த கோபுரத்தைக் கண்டுகொள்ளவும். பாலர்பாடசாலை Talstrasse இந்த கோபுரத்திற்கு எதிரே உள்ள பாடசாலைக் கட்டடத்தில் Talstrasse 28 இல் அமைந்துள்ளது. Kreuzfeld விளையாட்டுக் கூடத்திலிருந்து கிட்டத்தட்ட 5 நிமிட நடைதூரம், புகையிரத நிலையத்திலிருந்து 15 நிமிட நடைதூரம்.